**செய்தி வெளியீடு எண் : 319** **நாள் : 16.02.2023**

# செய்தி வெளியீடு

## “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

‘‘கள ஆய்வில் முதலமைச்சர்’’ என்ற புதிய திட்டத்தின் கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து 1.2.2023 மற்றும் 2.2.2023 ஆகிய தேதிகளில் வேலூர் மாவட்டத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ‘‘கள ஆய்வில் முதலமைச்சர்’’ திட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொள்வதற்காக நேற்று (15.2.2023) சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பட்டா மாறுதல், முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மற்றும் சேலம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் கட்டப்பட்டு வரும் ஈரடுக்கு பேருந்து நிலையத்திற்கான கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த தொழில் துறை மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள், மகளிர் சுயஉதவிக் குழுவினர் மற்றும் ‘‘நான் முதல்வன்’’ திட்டத்தின் கீழ் பயன்பெற்றுவரும் கல்லூரி மாணவ, மாணவியர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார். பின்னர், சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ‘‘கள ஆய்வில் முதலமைச்சர்’’ திட்டத்தின் கீழ், சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களின் காவல்துறை உயர் அலுவலர்களுடன் சட்டம் ஒழுங்கு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக இரண்டாவது நாளாக இன்று (16.2.2023) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி, மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியதாவது:**

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

தலைமைச் செயலாளர் அவர்களே,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்களே,

முதன்மைச் செயலாளர்களே,

அரசு செயலாளர்களே,

துறைத் தலைவர்களே,

சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்களே,

நான்கு மாவட்டங்களைச் சார்ந்திருக்கக்கூடிய அரசு அலுவலர்களே,

அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

களஆய்வில் முதலமைச்சர் என்ற திட்டத்தின் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்தித்து அரசின் திட்டங்கள் மக்களை எந்த அளவிற்கு சென்றடைந்துள்ளன; அவற்றை நிறைவேற்றுவதில் இருக்கக்கூடிய சிரமங்கள் என்ன; அந்த சிரமங்களை குறைக்கும் வழிகள் யாவை என்பதையும் குறித்து இந்த கள ஆய்வில் நாம் கலந்து பேசியிருக்கிறோம்.

ஓர் அரசு ஏன் இயங்குகிறது? அரசு அதிகாரிகளின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? சட்டங்களும், திட்டங்களும் எதற்காக வகுக்கப்படுகின்றன? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அப்படி சிந்திக்கும் போது நமக்கு கிடைக்கும் ஒரே பதில் **“மக்களின் தேவைகளை பூர்த்தி செய்தல்”** என்பது மட்டுமே.

நாம் இன்று காலை முதல் இங்கு அமர்ந்து, நேரத்தை செலவழித்து ஆய்வு செய்தது மக்களுக்கான நமது பொறுப்பை, கடமையை சரியாக செய்கிறோமா என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளவும்; தொய்வு காணும் இனங்களை சரி செய்து சீர்திருத்திக் கொள்ளவும் தான்.

மக்கள் தங்கள் குறைகளை, தேவைகளை, அரசு தீர்த்திடும் என்ற நம்பிக்கையில் அவற்றையெல்லாம் மனுக்களாக நம்மிடத்தில் வழங்குகிறார்கள். அவற்றை, நாம் வெறும் காகிதங்களாக பார்க்காமல் ஒருவரின் வாழ்வாக, எதிர்காலமாக கருதி பார்க்கவேண்டும். எனவே தான் இதன் முக்கியத்துவத்தை முன்னிறுத்தி **"முதல்வரின் முகவரி"** என்ற துறை உருவாக்கப்பட்டுள்ளது. மக்களாட்சி தத்துவத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள இந்த அரசு, அவர்களின் குறைகளைத் தீர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது என்பதை நீங்கள் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டுமென்று இந்தத் தருணத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பட்டா மாறுதல் தாமதமின்றி, எவ்வித அலைக்கழிப்பும் இன்றி நடைபெறுவதை மாவட்ட ஆட்சியரும், மாவட்ட வருவாய் அலுவலரும் உறுதி செய்ய வேண்டும். பெரிய திட்டங்களை மக்களுக்காக அரசு நிறைவேற்றி வரும் வேளையில், மக்களுக்குத் தேவையான இதுபோன்ற அடிப்படையான அரசு சேவைகள் வழங்கப்படுவதில் ஏற்படக்கூடிய தாமதங்கள் மக்களிடையே நல்ல பெயரை பெற்றுத்தராது. ஆகவே, அதிலே கவனமாகப் பணியாற்றுங்கள். சார்நிலை அலுவலர்களை ஆய்வு செய்யுங்கள். தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை கண்காணியுங்கள். குறிப்பாக கிராமப்புர மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை விரைந்து நிறைவேற்றித் தாருங்கள்.

**இருக்க வீடு; நடக்க சாலை; குடிக்க தண்ணீர்; இரவில் தெருவிளக்கு; படிக்கப் பள்ளி; கிராம சுகாதாரம் -** இதைத் தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இவற்றை தரமாக வழங்குவதில் என்ன சிரமம் இருந்தாலும் அவற்றை தீர்த்து முன்னேற்றம் காணுங்கள். நீங்கள்தான் அரசினுடைய முகமாக மாவட்டத்தில் பணியாற்றக்கூடியவர்கள். உங்கள் திறமையில்தான், கடின உழைப்பில்தான், உங்கள் மாவட்ட மக்களுடைய உயர்வை காணமுடியும். எனவே, இதனை மறவாது கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முக்கியமாக நான் குறிப்பிட விரும்புவது வேளாண் உற்பத்தி, மதிப்புகூட்டல் மற்றும் உழவர் உற்பத்தி குழுக்கள் பற்றியதாகும். நேற்றைய தினம் நான் இந்த நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு துறை பிரதிநிதிகளை

சந்தித்துப் பேசினேன். அப்போது, விவசாயிகள், சிறுதானிய உற்பத்தியாளர்கள் மற்றும் மதிப்புகூட்டு பொருட்கள் உற்பத்தியாளர்கள் சில முக்கியமான கருத்துக்களைத் தெரிவித்தனர். அவற்றை அரசு வேளாண்மைத் துறைச் செயலாளரும், மாவட்ட அளவில் ஆட்சியரும் கவனத்தில் கொண்டு செயல்பட கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் வருமானம் உயர்த்தப்பட வேண்டும் என்பது இவ்வரசின் முக்கிய இலக்குகளில் ஒன்றாகும். விவசாயிகளின் வாழ்வு வளமானால்தான், மாநிலம் வளரும், அது வளம் பெற்றதாகக் கருதப்படும். எனவே, வேளாண் திட்ட செயலாக்கங்களுக்கு முன்னுரிமை அளித்திடுங்கள்.

அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது **நகர்ப்புறப் பகுதிகளில் அடிப்படை வசதிகள்.** இந்த நான்கு மாவட்டங்களைப் பொருத்தவரை சேலம், ஒசூர் ஆகிய வேகமாக வளரக்கூடிய இரண்டு மாநகராட்சிகள் உள்ளிட்ட பல நகராட்சிப் பகுதிகள் உள்ளன. இங்கெல்லாம் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து வருவதால் மக்கள் தொகை உயர்வும் காணப்படுகிறது. இது நகராட்சிகள் வழங்கும் சேவைகளின் மீதான எதிர்பார்ப்பை உயர்த்துகிறது. எனவே, அடிப்படை பணிகளில் குறிப்பாக குப்பைகளை விரைந்து அகற்றுதல், கழிவு நீர் தேங்காமல் தூர் வாருதல், பழுதான சாலைகளை சீர் செய்தல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்துங்கள். இதனால் பல்லாயிரம் மக்கள் பயன்பெறுவார்கள்.

இதுபோல், கல்வி, சுகாதாரம் போன்ற ஒவ்வொரு துறையிலும் நிறைவேற்றப்பட்டு வரக்கூடிய திட்டங்களை கவனமாக ஆய்வு செய்து, உங்கள் மாவட்ட மக்கள் பயன்பெறச் செய்யுங்கள்.

அடுத்தபடியாக **ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள் மற்றும் விளிம்பு நிலை மக்களுக்கு தேவையான நலத்திட்டங்கள்.** என்னைப் பொறுத்தவரை உங்கள் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணிகள் பட்டியலில் இவை முதலிடம் பெறவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கான வீட்டுவசதி, தொழில் முனைவோர் திட்டங்கள், கல்வி உதவித்தொகை வழங்குதல், பள்ளி கல்லூரி விடுதிகள் ஆகிய பலவற்றிலும் சார்நிலை பணியினை கண்காணிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமூக ஊடகங்கள், தொலைக்காட்சி, செய்தித்தாள் மற்றும் பத்திரிகைகளில் வரக்கூடிய அரசு திட்டங்கள் தொடர்பான விமர்சனங்களை புறந்தள்ளாமல், உண்மையான குறைபாடுகள் இருந்தால் அவற்றை களைந்திடவேண்டும். அதோடு நில்லாமல், குறைகள் களையப்பட்டதையும் பதில் செய்தியாக அதே ஊடகத்திற்கு நீங்கள் அளிக்கவேண்டும். இது மிக மிக முக்கியமாக நீங்கள் உங்கள் மனதிலே பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இறுதியாக ஒன்றை உங்கள் அனைவரிடமும் குறிப்பாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அது என்னவென்றால், அரசு அலுவலகங்களை பல்வேறு தேவைகளுக்காக நாடிவரும் மக்களிடம் நீங்கள் ஒவ்வொருவரும் கனிவாக, பொறுமையாக நடந்து கொண்டு அவர்களின் கோரிக்கைகளுக்கு பொறுப்பாக பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக, ஒரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஏதேனும் ஒரு தேவைக்கு ஒருவர் வரும் போது, அங்கு அவர் எதற்காக வந்துள்ளார்? அதை யார் செய்வார்? அதற்கான மனு விபரங்களின் தேவை என்ன? ஆகியவை குறித்து பதில் கூற தற்போது யாரும் இல்லை என நினைக்கிறேன். இதனை சரி செய்ய வேண்டும். காவல்துறையில், வரவேற்பாளர் என்ற அமைப்பு காவல் நிலையத்தில் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சியை, பொதுமக்களுடன் நேரடி தொடர்பில் உள்ள பிற துறைகளும் மேற்கொள்ளலாம் என்ற ஆலோசனையை கூறிட விரும்புகிறேன்.

நான் முன்பே குறிப்பிட்டதைப் போல மக்கள் நலன் கருதியே அனைத்துத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை கொண்டுசேர்க்கும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதை காலத்தே செய்யுங்கள். செய்தும் வருகிறீர்கள். இன்னும் சிறப்பாக பணியாற்றுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு துறைகளில் பணியாற்றும் அனைத்து நிலை அலுவலர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வுக் கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் என்னுடைய வாழ்த்துகளைக் கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப., சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை முதன்மைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., அரசுத் துறைச் செயலாளர்கள், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கார்மேகம், இ.ஆ.ப., நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஸ்ரேயா பி. சிங், இ.ஆ.ப., கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கே. சாந்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

.............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in